பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 31** **நாள்: 06.02.2019**

## ஓட்டேரி மயானபூமியில் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் வேலங்காடு மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–104, ஓட்டேரி மயான பூமியில் எரியூட்டும் எரிவாயு கூடத்தில் உள்ள இயந்திரத்தில் பழுது ஏற்பட்டிருந்த காரணத்தினால் 05.02.2019 வரை மயான பூமி இயங்காது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது, ஓட்டேரி மயானபூமியில் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் 25.02.2019 வரை இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அண்ணாநகர் நியூ ஆவடி சாலையில் உள்ள வேலங்காடு மயானபூமியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**